**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.141/2020 |
| Prosecution Witness | : | அ.சா.3 |
| Name | : | ஜெகசூர்யா |
| Father's/Husband Name: | : | மயில்வாகனன் |
| Address : | : | 76/2, மாராடி துறையூர் அஞ்சல், திருச்சி மாவட்டம். |
| Age | : | 30/2023 |

தேதி: 26/06/2023

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.(1 முதரல் 7 **எதிரிகள் ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது சிறுவயலூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறனே். இதற்கு முன்பு டி களத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். என்னிடம் காண்பிக்கப்படும் கிராம நிர்வாக அலுவலர் சான்றை நான் தான் வழங்கினேன். அது **அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சான்றை நான் பெரம்பலூர் போலீசார் என்னிடம் புல எண் 10/2, 10/3, 10/4, 10/5 மற்றும் 10/8 ஆகியவற்றுக்கான நிலம் யாருடைய பெயரில் உள்ளது என விசாரித்தபோது, எங்களது ஆவணங்களை பார்வையிட்டு அந்த நிலம் யாருடைய பெயரில் உள்ளது என சான்று வழங்கினேன். மேலும், டி

களத்தூரை சேர்ந்த கந்தன் த/பெ.ராஜேந்தரன் என்பவர் அந்த கிராமத்தில்தான் குடியிருக்கிறாரா என விசாரித்தார். அதற்கு தற்சமயம் அந்த கிராமத்தில் குடியிருக்கவில்லை என நான் சான்று வழங்கினேன். அந்த அப்படி ஒரு நபர் வசித்ததில்லை என நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**1 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எங்களது அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் நகலை இந்த சான்றுடன் இணைத்துள்ளேனா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக்கொணடதற்கிணங்க நான் ஆவணம் எதையும் பார்வையிடாமல் இந்த சான்றை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.